தொல்காப்பிய மன்றம் - கனடா
Association for Tolkappiyam - Canada
தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

# முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு - 2024

## பேச்சுப் போட்டி: வகுப்பு - 02 (2016-இல் பிறந்தோர்)

### அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்

அன்பு ஒரு பண்பு, ஒரு மனநிலை. அன்பு மனம் சார்ந்தது. அன்புதான் மகிழ்ச்சிக்கான மிகப் பெரிய வழி. அன்பு எப்போதும் பிற உணர்வுகளுடன் கலந்திருக்கிறது. மற்றவர்களின் தேவைகளை உணர்ந்து கொள்ளும் ஒரு பண்பு அன்பாகும். அன்பு உள்ளவர்களிடம் கருணை இயல்பாகவே அமைந்திருக்கும்.

அன்பு ஓர் உணர்வு, ஆனாலும் அது வெளிப்படுத்தப்படும் இடத்தைப் பொறுத்து வேறுபடுகிறது. அது, அன்னையிடம் **பாசமாகவும்**, இறைவனிடம் **பக்தியாகவும்**, ஏழையிடம் **இரக்கமாகவும்**, பகைவனிடம் **மனிதநேயமாகவும்** வெளிப்படுகிறது.

உலகில் மனிதனை மனிதனாக வாழ வைப்பது அன்பு. அதனைப் பொருள் கொடுத்து வாங்கிவிட முடியாது. அன்பு இல்லாதவர்கள் உயிர் அற்ற உடலுக்குச் சமானமானவர்கள். இதனையே திருவள்ளுவரும்,

**"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்பு தோல் போர்த்த உடம்பு"**

என்கிறார்.

"வாழ்வின் உண்மையான பொருள், அன்பு செலுத்துவதிலும், அன்பு செலுத்தப்படுவதிலுமே பொதிந்துள்ளது" என்பது - அன்னை தெரசாவின் பொன்மொழி. அனைத்து மதங்களுக்கும் அடிநாதம் அன்பாகும்.

அன்பு தன்னைத் தவிர வேறு எதனையும் தருவதும் இல்லை, எதிர்பார்ப்பதும் இல்லை. நாம் ஒருவரை எந்த அளவுக்கு நேசிக்கிறோம் என்பதை நமது கண்ணீரே வெளிப்படுத்திவிடும். அள்ள அள்ளக் குறையாத அன்பை நாம் அனைத்து உயிர்களிடத்தும் வெளிப்படுத்தி அன்பாக வாழ்வோம்.

**'அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கண்ணீர் பூசல் தரும்."**

நன்றி. வணக்கம்.